349—

## புதிய மாவட்டம்

*20787—திரு. இரா. துரைக்கண்ணு:

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாசலம், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தைப் பிரித்து புதிய கும்பகோணம் மாவட்டம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிர்ணயித்துள்ள அளவுகோலை அந்தப் புதிய பகுதி பூர்த்தி செய்யாத காரணத்தால், கும்பகோணம் பகுதியைத் தலைமை இடமாகக் கொண்ட புதிய மாவட்டம் அமைப்பதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*

**திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள், குறிப்பாக காவேரி டெல்டா விவசாய மக்களின் வாழ்வாதாரமாக விளங்கி வரும் காவேரி நதி நீர்ப் பிரச்சினையில் இறுதி முடிவை ஏற்படுத்தி, இன்றைக்குக் காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் பதிவேட்டில் வெளியிட்டு, வரலாறு படைத்திட்ட சாதனைத் தலைவி, தங்கத் தாரகை, வீர மங்கை வேலு நாச்சியார் (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிச் செல்வி, காவேரியை மீட்டுத் தந்த காவேரியின் காவல் தெய்வம், பொன்னியின் செல்வி, இதய தெய்வம், வருங்காலத்தில் இந்திய நாட்டை உலக அரங்கில் வல்லரசாக ஆக்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய நாட்டை ஆளப் போகும் வருங்கால பாரதப் பிரதமர்*

புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு காவேரி டெல்டா மக்கள் சார்பில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அம்மா தங்கள் மலர்ப்பாதம் வணங்குகின்றேன்.

முற்பகல் 11—05

"கேட்டதும் கொடுப்பவனே, கிருஷ்ணா கிருஷ்ணா
கீதையின் நாயகனே, கிருஷ்ணா, கிருஷ்ணா"

"இறைவனிடம் கை ஏந்துங்கள்
அவன் இல்லையென்று சொல்லுவதில்லை,
பொறுமையுடன் கேட்டுப்பாருங்கள்
அவன் பொக்கிஷத்தை மூடுவதில்லை"
(மேசையைத்தட்டும் ஒலி)

"கேளுங்கள் கொடுக்கப்படும்,
தட்டுங்கள் திறக்கப்படும்,
தேடுங்கள் கிடைக்கும் என்றார்.
இயேசு 'தேடுங்கள் கிடைக்கும் என்றார்"

அனைத்து மதக் கடவுள்களும் கேட்டால்தான் வரம் கொடுப்பார்கள். ஆனால், எங்கள் நடமாடும் கண்கண்ட தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்காமலேயே மக்கள் நிலை அறிந்து, தேவை அறிந்து, நாட்டின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இன்றைக்குத் தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்துபவர்கள் எங்கள் அம்மா அவர்கள். தினமும் விதி 110-ன்கீழ் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் நல்ல பல திட்டங்களையும், அறிவிப்புகளையும், உதவிகளையும் செயல்படுத்தி வருபவர் சமூக நீதி காத்த வீராங்கனை, கருவறையிலிருந்து, கல்லறை வரை நல்ல பல திட்டங்களையும், நல்ல உதவிகளையும் வழங்கி வருபவர் எங்கள் பாரதத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார் இராமலிங்க அடிகளார். ஆனால், எங்கள் தாய் உள்ளம் கொண்ட அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு கேட்காமலேயே வறட்சியால் பாதித்த விவசாய மக்களின் மனம் வருந்தும் முன்பே, யாரும் எதிர்பார்த்திராத வகையில் நிவாரண உதவினை அனைத்து மாவட்டங்களுக்கும் வாரி வழங்கியவர், (மேசையைத் தட்டும் ஒலி) வாட்டத்தைப் போக்கியவர், கருணையின் வடிவமே கொண்ட வள்ளலுக்கெல்லாம் தலையாய

வள்ளலாகத் திகழ்பவர், எங்கள் காவல் தெய்வம் வருங்கால பாரதப் பிரதமர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்கள் இந்திய தேசியப் பற்றுள்ளவர். இந்திய தேசியத் தலைவர் என்பது இன்றைக்கு அல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பே அறிந்த ஒன்று. இந்திய-சீனா போரின்போது தன்னுடைய சொந்தக் குடும்பப் பொன், வைர நகைகளை (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளித் தட்டில் வைத்து போர் நிதியாக பாரதப் பிரதமரிடம் வாரி வழங்கியவர்தான் வருங்கால பாரதப் பிரதமர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எதையும் கேட்காமலேயே வாரி வழங்கும் நல்ல பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்திவரும், பொற்கால ஆட்சி நடத்திவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாம் உள்ளத்தோடு கருணை புரிந்து தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கோயில் நகரமாம், வர்த்தக நகரமாம், மகாமகம் போன்ற தேசிய அளவிலான தேர்த் திருவிழா நடக்கும் நகரமாம், புரட்சித் தலைவர் எம்ஜிஆர். அவர்கள் படித்து வாழ்ந்த கும்பகோணத்தை, அவர் நினைவாக, தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைத்துத் தர வேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் பாடியதைப்போல் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் "இல்லை என்றும் இல்லை, இல்லையென்பது இல்லை" அம்மா அவர்கள் ஆட்சி புரியும் தமிழ்நாட்டிலே கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்கி வேண்டுகின்றேன், அம்மா; வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு மாவட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், பிரிக்கப்படுகின்ற அந்தப் பகுதியானது அரசு நிர்ணயித்திருக்கின்ற அளவுகோலைப் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும். பிரிக்கப்படுகின்ற அந்தப் பகுதியினுடைய மக்கள் தொகையானது 10 இலட்சம் மக்களை*

2013 ஏப்ரல் 29]

உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். பிரிக்கப்படுகின்ற அந்தப் பகுதியினுடைய பரப்பளவானது 2,500 சதுர கிலோ மீட்டர் கொண்டதாக அமைய வேண்டும். பிரிக்கப்படுகின்ற பகுதியிலே இரண்டு கோட்டங்கள் இருக்க வேண்டும். பிரிக்கப்படுகின்ற பகுதி 5 வருவாய் வட்டங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். பிரிக்கப்படுகின்ற பகுதி 300 வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அப்படி இருக்கின்றபட்சத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துருவைப் பெற்று மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்த மாவட்டத்தை உருவாக்குவதற்கு உண்டான பரிசீலனையை உள்ளடக்கியதாக மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் புதிய பகுதி, அரசு நிர்ணயித்திருக்கின்ற அளவுகோலான 2,500 சதுர கிலோ மீட்டர் என்பதற்குப் பதிலாக 1,200 சதுர கிலோ மீட்டர் பகுதியை மட்டுமே உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பிரிக்கப்படுகின்ற பகுதியானது, அரசு நிர்ணயித்துள்ள அந்த அளவுகோலைப் பூர்த்தி செய்யாத காரணத்தினாலே, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பிரித்து கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலுங்கூட, இது மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

திரு. இரா. துரைக்கண்ணு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தாய், அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் என்னுடைய கோரிக்கையை . வைத்துவிட்டேன். நிறைவேற்றித் தருவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடமை என்று கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 350, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**350—**

**உருது தொடக்கப் பள்ளி**

***14262—திரு. கு. லிங்கமுத்து:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டில் உருது தொடக்கப் பள்ளி அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், பேரணாம்பட்டு நகராட்சி, இஸ்லாமியர் பகுதியில் புதிய உருது தொடக்கப் பள்ளி தொடங்குவதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்வதால், அப்பகுதியில் புதிய உருது தொடக்கப் பள்ளி தொடங்குவதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்கிற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கொடி ஏந்திய தோழரின் கேள்விக்கு அரசு பச்சைக் கொடி காட்டியிருக்கிறது" என்கிற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*